# ஹிந்தி எதிர்ப்புப் படை நடத்தல்!

[எஸ். சிவப்பிரகாசம்]

('அச்சமில்லை அச்சமில்லை' என்ற பாரதி மெட்டுப்போல)

வீழ்க ஹிந்தி வீழ்க வென்றே வீரர்காள் நடப்பீரே!
வெற்றியின்றேல் மீளோமென்று விருதுகூறி நடப்பீரே!
வாழ்க தமிழ்! வாழ்க தமிழ்!! என்று சொல்லி நடப்பீரே!
வையமெதிர்த் தாலுட்பய மில்லை என்று நடப்பீரே!

சாரத்தமிழ் மாண்டுபோகத் தமிழர்காள் சகிப்பீரோ?
தந்தை தாயர் ஊட்டி வந்த அமுதை இன்று மறப்பீரோ?
வீரமுற்ற தமிழர்வாழ்வு வீழ்ச்சியுறச் சகிப்பீரோ?
வெற்றி வீரர் நமது முன்னோர் என்ற உண்மை மறப்பீரோ?

ஆரியர்கள் சூழ்ச்சி கண்டும் நரிபோல வாழ்வீரோ?
அக்ரமத்திற் கடிபணிந்தே ஆண்மையற்றுத் தாழ்வீரோ?
சீரில்லாத ஹிந்திதாதி மீது மோகங் கொள்வீரோ?
தேசியத்தின் பேரைச் சொன்னால் செந்தமிழைத் தவிர்ப்பீரோ?

மலைபுரண்டு வந்த போதும் மறத்தமிழர் அஞ்சிடோம்!
வானிடிந்து வீழ்ந்த போதும் மானமற்றுக் கெஞ்சிடோம்!
குலங்கெடுத்த நாய்கள் போலக் கொண்ட கொள்கை
நைவிடோம்!
கூறுசெய்து வீழ்த்தினாலும் வீரவாழ்வைக் கைவிடோம்!

(வீழ்க ஹிந்தி)